Land Transport Authority
We Keep Your World Moving

# உங்களின் புதிய உள்வாகனச் சாதனத்தைப் (OBU) பற்றி அறிந்து கொள்ளுங்கள்

**உங்கள் உள்வாகனச் சாதனத்தின் அம்சங்கள், சிக்கல்தீர்வு உதவிக்குறிப்புகள் மற்றும் உத்தரவாதம்.**



# உங்கள் உள்வாகனச் சாதனம் (OBU) நிறுவப்பட்டவுடன், நீங்கள் அதைப் பயன்படுத்தலாம்.


உங்கள் சாதனத்தின் அம்சங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி மேலும் அறிய **go.gov.sg/erp2-obu** என்ற இணையத்தளத்தை நாடுங்கள்.









### எனது உள்வாகனச் சாதனத்தை எப்படி இயக்கத் தொடங்குவது?

உங்கள் வாகனத்தை இயக்கத் தொடங்கும்போது, உள்வாகனச் சாதனமும் அதன் தொடுதிரையும் தானாகவே இயங்கத் தொடங்கும். நீங்கள் ஓர் அறிவிப்பு ஒலியையும் கேட்பீர்கள். உங்கள் வாகனம் அடைக்கப்படும் போது அவற்றின் மின்சார இணைப்பு துண்டிக்கப்படும்.



### நான் எவ்வாறு பணம் செலுத்த முடியும்?

செல்லுபடியாகும் ஒரு CEPAS அட்டையை (எ.கா., நெட்ஸ் ஃப்ளாஷ்பே அல்லது நெட்ஸ்/ஈசி-லிங்க் மோட்டாரிங் அட்டைகள்) உங்கள் செயலாக்கியில் செருகவும். உங்களது ERP கட்டணங்களைச் செலுத்துவதற்கு நீங்கள் பின்னிலைக் கட்டணமுறைக்கும் பதிவுசெய்து கொள்ளலாம். பின்னிலை கட்டணமுறைக்கான வசதி எல்லா வாகன நிறுத்துமிடங்களிலும் இன்னும் நடப்புக்கு வரவில்லை என்பதால், தேவைப்படும் போது நிறுத்துமிடத்திற்கான கட்டணத்தைச் செலுத்த CEPAS அட்டையில் போதுமான இருப்புத் தொகை இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

குறிப்பு: பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்யப் பயன்படுத்தப்படும் SimplyGo ஈசி-லிங்க் அட்டைகள் உள்வாகனச் சாதனத்தில் பொருந்தாது.



### நான் இன்னும் ரொக்க அட்டைகளைப் பயன்படுத்த முடியுமா?

இல்லை, ரொக்க அட்டைகள் இனி ஆதரிக்கப்படாது.



### காட்சியின் பிரகாசம் மற்றும் ஒலியளவை என்னால் மாற்ற முடியுமா?

ஆம், தொடுதிரையின் பிரகாசம் மற்றும் கேட்பொலி விழிப்பூட்டல்களின் ஒலியளவை மூன்று பாக OBU சாதனத்தின் தொடுதிரை காட்சி வழியாகவும், ஒரு பாக OBU சாதனத்தின் தொடுபலகம் வழியாகவும் மாற்றலாம்.

**நீங்கள் தொடுதிரை காட்சியை நிறுவியிருக்கவில்லை என்றால்:**

- பொருத்தமான கைப்பேசி செயலிகளின் பட்டியலை OneMotoring இணையத்தளத்தில் பார்வையிட்டபின், அதை App Store/ Google Play Store இயங்கு தளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்யவும் .
- உங்களது திறன்பேசியை OneMotoring மின்னிலக்கச் சேவைகள் வழியாகப் பதிவு செய்யவும்.
- பதிவுசெய்யப்பட்ட திறன்பேசியை புளூடூத் (Bluetooth) வழியாக உங்கள் உள்வாகனச் சாதனத்துடன் இணைக்கவும்.

**உங்கள் திறன்பேசியை உள்வாகனச் சாதனத்துடன் இணைப்பதற்கான படிப்படியான வழிகாட்டிக்கு இங்கே கிளிக் செய்யவும்.**

# உங்கள் உள்வாகனச் சாதனத்தின் சிக்கல்களுக்குத் தீர்வுகாணுதல்

உங்கள் உள்வாகனச் சாதனத்தில் ஏதேனும் பிரச்சினை இருந்தால், எங்கள் பின்னிலை செயலமைப்பு அதைக் கண்டறிந்து, 7 முதல் 30 நாட்களுக்குள் உங்களுக்கு வாகனப் பரிசோதனை அறிவிப்பை (Vehicle Inspection Notice) அனுப்பும்.




### எனது தொடுதிரை காட்சி வேலை செய்யவில்லை என்றால் அல்லது எனது வாகனம் இயங்கிக் கொண்டிருக்கும்போது காட்சி அல்லது ஒலி இல்லை என்றால் நான் என்ன செய்ய வேண்டும்?

உங்கள் வாகனத்தை அடைத்துவிட்டு மீண்டும் இயக்குவதன் மூலம் உள்வாகனச் சாதனத்தை மீண்டும் தொடங்கவும். பிரச்சினை நீடித்தால், வாகனப் பரிசோதனை அறிவிப்பைப் பெற்ற பிறகு, அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை நிலையம் ஒன்றுக்குச் செல்லவும்.



### எனது உள்வாகனச் சாதனத்தில் ஏதேனும் ஒரு பகுதி கழன்றுவிட்டால் என்ன செய்வது?

உங்கள் உள்வாகனச் சாதனம் தொடர்ந்து செயல்பட இயலும். இல்லையெனில், அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை நிலையம் ஒன்றுக்குச் சென்று நீங்கள் உதவி பெறலாம்.



### சாலையில் வாகனம் ஓட்டும்போது தொடுதிரையில் உள்ள செயல்பாடுகளை ஏன் என்னால் மாற்ற முடியவில்லை?

சமிக்ஞை இல்லாதபோது அல்லது வாகனம் நகரும்போது உள்வாகனச் சாதனத்தின் தொடுதிரையை செயல் படுத்த முடியாது. இந்தப் பாதுகாப்பு அம்சம், வாகனம் ஓட்டும்போது அல்லது சுரங்கப்பாதைகளுக்குள் இருக்கும்போது வாகன ஓட்டுநர்கள் திரையைத் தொடுவதைத் தடுக்கிறது.





### எந்தப் பிரச்சினையையும் நான் கவனிக்கவில்லை என்றாலும் எனக்கு ஏன் வாகனப் பரிசோதனை அறிவிப்பு கிடைத்தது?

உங்கள் உள்வாகனச் சாதனத்தின் ஒரு பாகம் தவறாகச் செயல்படுவதை இது குறிக்கலாம். அறிவிப்பு கிடைத்த பிறகு, அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை நிலையம் ஒன்றுக்குச் செல்லவும்.



உள்வாகனச் சாதனத்தில் செயல்பிழை ஏற்படும் அவசர சூழ்நிலைகளில், நீங்கள் வாகனப் பரிசோதனை அறிவிப்பு இல்லாமலேயே அங்கீகரிக்கப்பட்ட சேவை மையத்திற்கு அல்லது உள்வாகனச் சாதன பராமரிப்பு நிலையத்திற்குச் செல்லலாம். இதற்கு மாற்றாக, 6377-2255 என்ற எண்ணில் எங்கள் உதவிச் சேவையையும் நீங்கள் அழைக்கலாம்.

உங்கள் உள்வாகனச் சாதனத்தின் சிக்கல்தீர்வுக்குக் கூடுதல் உதவி பெற, **go.gov.sg/obu-troubleshoot** என்ற இணையத்தளத்தை நாடவும்.

# உங்கள் உள்வாகனச் சாதனத்தின் உத்தரவாதம் (விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்)




ஒவ்வொரு உள்வாகனச் சாதனமும் 5 ஆண்டு உத்தரவாதத்துடன் வருகிறது, சாதனம் நிறுவப்படும் தேதியிலிருந்து உத்தரவாதம் தொடங்குகிறது.

உள்வாகனச் சாதனத்தின் உத்தரவாதம், அனைத்து உற்பத்தியாளர் குறைபாடுகளுக்கும் பொருந்தும். இருப்பினும், பயனர் அலட்சியம், முறையற்ற நிறுவல், விபத்து, தவறாகக் கையாளுதல், தவறான பயன்பாடு, சேதப்படுத்துதல், நாசப்படுத்துதல், வழக்கத்திற்கு மாறான இயக்கச் சூழல்கள் போன்ற காரணங்களால் நிகழும் தயாரிப்பு குறைபாடுகளுக்கான உத்தரவாத வரம்புகளுக்கு உட்பட்டது.

உள்வாகனச் சாதனம் உத்தரவாதத்தின் கீழ் இருந்தால், ஏதேனும் குறைபாடுள்ள பாகம் இலவசமாக மாற்றித் தரப்படும். மாற்றித் தரப்படும் பாகம், ஆரம்பத்தில் நிறுவப்பட்ட உள்வாகனச் சாதனத்தின் உத்தரவாதக் காலத்தைப் பின்பற்றும். உத்தரவாதத்தின் கீழ் இல்லாத உள்வாகனச் சாதனத்திற்காக ஒரு மாற்றுப் பாகம் வாங்கப்பட்டால், மாற்றித் தரப்படும் பாகம், அதன் சொந்த புதிய உத்தரவாதக் காலத்தைக் கொண்டிருக்கும். இது ஒரு பாக உள்வாகனச் சாதனத்திற்கும் பொருந்தும்.

**எனது உள்வாகனச் சாதனத்தின் உத்தரவாதத்தின் காலாவதி தேதியை நான் எங்கே காணலாம்?**

உங்கள் உள்வாகனச் சாதனத்தின் உத்தரவாதத்தின் காலாவதி தேதியை OneMotoring மின்னிலக்கச் சேவைகளில் காணலாம்.

**எனது உள்வாகனச் சாதனத்தில் உள்ள பழுதைச் சரிசெய்ய யாருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது?**

அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை நிலையங்கள், சேவை நிலையங்கள், உள்வாகனச் சாதன பராமரிப்பு நிலையங்கள் ஆகியவை உள்வாகனச் சாதனத்தை பரிசோதனை செய்து மாற்றித் தருவதற்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளன. நீங்கள் ஒரு வாகனப் பரிசோதனை அறிவிப்பைப் பெற்றால், உங்கள் உள்வாகனச் சாதனத்தை பரிசோதனை செய்ய அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை நிலையம் ஒன்றுக்குச் செல்ல வேண்டும்.

**அங்கீகரிக்கப்பட்ட உள்வாகனச் சாதன பரிசோதனை மற்றும் சேவை நிலையங்களின் பட்டியலுக்கு இங்கே கிளிக் செய்யவும்.**

**உள்வாகனச் சாதன பராமரிப்பு நிலையங்களின் பட்டியலுக்கு இங்கே கிளிக் செய்யவும்.**

OBU 2.0 பற்றிய மேல்விவரங்களுக்கு,
தயவுசெய்து நாடுங்கள்:

**go.gov.sg/erp2-1m**

**go.gov.sg/erp2-guide**

உங்களுக்குக் கூடுதல் ஆதரவு தேவைப்பட்டால் அல்லது வேறு ஏதேனும் கேள்விகள் இருந்தால், எங்களின் நேரடித் தொலைப்பேசி எண்ணில் அல்லது கீழே உள்ள படிவத்தின் மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

நேரடித் தொலைபேசி எண்: **6377-2255**

இயங்கும் நேரங்கள்:
**திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை**
**சனிக்கிழமை, காலை 8 மணி முதல் மதியம் 12.30 மணி வரை**

**go.gov.sg/erp2-contactus**

@WeKeepYourWorldMoving @ltasg

www.lta.gov.sg @LTASingapore